விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 பங்குனி 27 ஜ. ஆகிர் 14 இதழ் 56

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 9—4—82

# ஊர்காவல்படை அமைப்பு:

## யாழ். செயலகத்தில் இன்று ஆலோசனை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபையின் கீழ் ஊர்க்காவல் படை அமைப்பது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் இன்று காலை யாழ். செயலகத்தில், அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் நடைபெறவிருக்கிறது.

ஆலோசனைக்கூட்டத்தில் யாழ். மாவட்ட செயலாளரும், யாழ். அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா உட்பட யாழ். மாவட்ட மேலதிக—உதவி அரசாங்க அதிபர்கள், வட பிராந்திய உதவிப்பொலிஸ்மா அதிபர் திரு. அ. நவரத்தினம் மற்றும் யாழ். மாவட்டத்திலுள்ள பொலிஸ் அதிபர்கள், உதவிப் பொலிஸ் அதிபர்கள், வடபகுதி இராணுவப்பொறுப்பதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆலோசனைக்கூட்டம் மூன்று கட்டங்களாக நடைபெற்று இறுதிமுடிவு எடுக்கப்படலாமெனத் தெரிகிறது. (மா)

★ ஆழ்கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற

# குருநகர்மீனவர்கள்5நாட்களாக

# காணவில்லை!

## கடற்படை விமானப்படை தேடுதல் வேட்டை!

(யாழ்ப்பாணம்)

**குருநகர் கடற்கரைப் பகுதியிலிருந்து ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச்சென்ற மீனவர்கள், ஐந்துநாட்களாகியும் கரை திரும்பவில்லை!**

இயந்திரப் படகுகளில் மீன் பிடிக்கச்சென்ற இவர்களைத் தேடி கடற்படையினரும் விமானப்படையினரும் நேற்று தீவிர வேட்டையில் ஈடுபட்டனர்.

குருநகர்க்கடற் கரைப்பகுதியிலிருந்து மீன்பிடிக்கச்சென்ற ஒன்பது மீனவர்கள் ஐந்து நாட்களாகியும் கரை திரும்பாததையிட்டு அப்பகுதி மக்கள் மிகுந்த கவலையடைந்துள்ளனர்.

இவர்களில் ஆறுபேர் ஒரு இயந்திரப்படகிலும் 3 பேர் ஒரு இயந்திரப்படகிலும் சென்றிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

விமானப் படையினரும், கடற்படையினரும் காணமற்போன மீனவர்களையும், இயந்திரப் படகுகளையும் கண்டுபிடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையே அண்மை

(8-ம் பக்கம்பார்க்க)

பஸ் சாரதி மரண எதிரொலி:

# சபை ஊழியர்கள்

## திடீர் வேலை நிறுத்தம்!

(புத்தளம்)

புத்தளம் டிப்போவைச் சேர்ந்த மத்திய போக்கு வரத்துச்சபை ஊழியர்கள் திடீர் வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்.

இந்த டிப்போவைச் சேர்ந்த பஸ்சாரதியொருவர் கடந்த செவ்வாய்க்கிழமை மரணமானதையடுத்தே இவர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இச்சாரதி கடந்த திங்கட்கிழமைமதுபோதையில்காணப்பட்டதாகவும், டிப்போவிலிருந்து இவரை வெளியே கொண்டுபோனபோதுமரணம் சம்பவித்ததாகவும் கூறப்பட்டது.

சட்டத்தையும், ஒழுங்கையும் இங்கு நிலைநாட்டுமாறு மத்திய போக்கு வரத்துசபைத் தலைவர் கலாநிதி காமினிவிஜயசேகரா பொலிசாரை கேட்டுள்ளார்.

மரணமடைந்த பஸ் சாரதியின் இறுதிச் சடங்குகளை மேற்கொள்வதற்கான நிதி உதவியையும் மத்திய போக்கு வரத்து சபை வழங்கியுள்ளது.

# "தலைமைப்பீடத்தை பலவீனப்படுத்தாமல் பலப்படுத்துங்கள்!"

## ஆண்டுவிழாவில் 'யோகேஸ்'

### அரசு - கூட்டணி பேச்சுபற்றியும் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

''நமது நாட்டுத் தமிழ்த் தலைவர்கள் இன்று நேற்று உருவாகியவர்கள் அல்ல. முப்பது வருடங்களுக்கு முன்னரே ஒரு தலைமைப்பீடத்தை உருவாக்கி. தமிழ்த் தலைவர்களைத் தோற்றுவித்து அவர்கள் வகுத்த இலட்சியப் பாதையில் நாம் சென்று கொண்டிருக்கிறோம். தலைமைப்பீடத்தைப் பலவீனப் படுத்தும் முயற்சியில் இறங்காமல், தலைமைப்பீடத்தைப் பலப்படுத்த முயற்சியுங்கள். தமிழ்மக்கள் ஏற்றுக்கொண்ட மாவட்ட அபிவிருத்திச்சபைகள், அதிகாரம் இல்லாமல் வெறும் பொம்மையாக இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி, மாவட்ட அபிவிருத்திச் சபைக்கு அதிகாரம் கிடைக்க முயற்சித்தோம்'' என்று யாழ். எம்.

(8ம் பக்கம் பார்க்க)

# கடல்அரிப்பு ஆபத்து: குடிசைவாசிகள் பாதிப்பு

(மண்டைதீவு)

மண்டைதீவு கிழக்குப்பகுதியில் கடல் அரிப்பு ஏற்பட்டு, கடல் நீர் உட்புகுந்திருப்பதால் கரையோரக் குடிசைவாசிகள் கடுமையாகப்பாதிக்கப்பட்டுள்ளனர்!

இப்பகுதியில் வாழும் நூற்றுக்குமேற்பட்ட குடிசைவாசிகள் இக்கடல் அரிப்பால் வேறு இடங்களுக்கு குடி பெயர்ந்துள்ளனர்.

கடல் அரிப்பைத் தடுப்பதற்கு பாரிய அணைக்கட்டு ஒன்றை அமைக்கச் சம்பந்தப்பட்ட அமைச்சுடன் உடனடியாகத் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி பொதுஸ்தாபனங்

(8ம் பக்கம் பார்க்க)

# சிறிமாவுக்கு சிறப்பான வரவேற்பு

(அனுராதபுரம்)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று அனுராதபுரத்துக்கு விஜயம் செய்தபோது சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அநுராதபுர நகரம் விழாக் கோலம் பூண்டிருந்தது. நகரின் பல பகுதிகளிலும் நீல நிறக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

(வவனியா நிருபர்)

உ

சிவமயம்

## திருமண அழைப்பு

மணமகன்:— சோ. சே. இராஜன்
(Civil Engineer -Barrow-Cumbria)
வரணி நடுக்குறிச்சி முன்நாள் ஆசிரியர் சோ. சிதம்பரப்பிள்ளையினதும் திருமதி சிதம்பரப்பிள்ளையினதும் மகன்.

மணமகள்:— க. கனகாம்பிகை
வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம். இளைப்பாறிய பகிரங்க வேலைப்பகுதி மேற்பார்வையாளர் குருநாகல்/நல்லூர் பூநகரி ஆ. கனகசபையினதும் திருமதி கனகசபையினதும் மகள்.

துர்மதி வருடம் பங்குனி மாதம் 28ம் திகதி (10—4—1982) சனிக்கிழமை காலை 7—8 மணிக்கிடையில் வரும் சுப முகூர்த்தத்தில் திருமணம் தெல்லிப்பழை தலைமன்கலட்டியிலுள்ள 'ஸ்ரீபதி' மணமகள் இல்லத்தில் நடைபெறும்.

உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். (2807)

யாழ். பல்கலைக்கழகம்

# பட்டப் பின்படிப்பு ஆசிரியர் தகுதிப்பத்திர பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பட்டப்பின்படிப்பு ஆசிரியர் தகுதிப் பத்திரப் பரீட்சை (1981) பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பெயர் விபரம் வருமாறு;

### விசேட சித்தி

வை. அகமது லெப்பை. திருமதி ரி. அரிராஜசிங்கம், ரி. கனகரத்தினம், பி, சுப்பிரமணியம்.

### திறமைச் சித்தி

ஜே. அமலசீலன், ரி. அமிர்தலிங்கம், திருமதி எம். எஸ். தேவநாயகம். கே. ஞானவதி புள்ளே, கே எஸ். கணேசு, எஸ். ஏ. சி. எம். இனுனு, ஜே. ஜோன்பிள்ளை, கே. கனகசூரியம், செல்வி வை. கந்தையா, செல்வி பி. மார்க்கண்டு, செல்வி என். முத்துக்குமாரு, திருமதி எஸ், நாகேஸ்வரன், திருமதி ஜே. நமசிவாயம், திருமதி ஆர். நந்தகுமார், திருமதி ரி ராஜரத்தினம், செல்வி ரி. ராமலிங்கம், கே. சரவணபவன், திருமதி பி. சண்முகம், என். சிதம்பநாதன் திருமதி டபிள்யூ. சுப்பிரமணி

(8ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

சிரிப்பை விடத்துக்கம் சிறந்தது; ஏனெனில் முகத்தின் சோகம் இருதயத்தை நல்ல தாக்குகிறது. — பைபிள்

## நமது நோக்கு

# இருள் படிந்த இன்றைய உலகம்

சாதாரணமாக உலகத்திலே சௌந்தர்ய உணர்ச்சி மங்கிக் குரூரமும், அலங்கோலமும் அதிகரிக்கும் போது, கடவுள் ஒரு தீர்க்க தரிசியை, ஒரு கவிஞனைத் தன் தூதனாகஅனுப்புகிறார் என்றொரு நம்பிக்கை தொன்றுதொட்டு வளர்ந்து வந்திருக்கிறது.

அழகின் தத்துவத்தை நிலைநாட்டுவதற்காக, அன்பு நெறி மறைந்து மனித சமுதாயத்தில் மிருகபுத்தி தாண்டவமாடும் போது, ஒரு புத்தனை ஒரு கிறித்துவை தன் தூதனாக அனுப்புகிறார். அன்பில் அமையும் சகோதரத்துவம் வறண்டு, கடவுள் ஞானமற்று உட்பகை அதிகரிக்கும் போது ஒரு நபி நாயகத்தை அல்லா தன் தூதனாக அனுப்புகிறார்.

இன்றைய உலகத்தை கூர்ந்து நோக்கும் போது கடவுளின் இந்தக் கடமை கைவிடப்பட்டு விட்டதோ என்று ஐயப்படவேண்டியிருக்கிறது.

தன்னலக் கலப்பில்லாத அன்பை அருள் என்று சொன்னார் வள்ளுவர். இதனைத் தம் வாழ்வில் உலகுக்குப் போதித்து தாம் சிலுவையில் அறைபட்டு ஏற்றுக்கொண்ட மரணத்தால் சாதித்தவர் யேசு கிறீத்துநாதர்.

கிறித்தவ உலகம் இந்தத் துன்பசம்பவத்தையும், அதன் உட்கருத்தையும் நினைவுகூரும் நாளாகவே இன்றைய பெரியவெள்ளி நோன்புக்குரிய நாளாகின்றது.

மன்னுயிர் வாழ தன்னுயிர் நீக்கும் சீலம் உலகில் இன்று எவ்வளவு தூரம் மக்களைக் கவர்ந்திருக்கிறது? கவலை ஊட்டும் கேள்வி இது.

இன்னொரு உயிருக்குத் துன்பம் வந்தால் அருளாளர்கள் அதைச்சகிக்கமாட்டார்கள். நாம் வாழும் இவ்வுலகத்திலே தொலைதூரத்துக்கப்பால் உள்ள ஒருநாட்டில் ஒருயிர் அல்லலுறுகிறதென்று தெரிந்தால் யேசு போன்ற அருளாளர்களுக்கு உறக்கம் வராது. ஈராக்—ஈரான் யுத்தத்திலே ஆயிரக்கணக்கான மக்கள்கொல்லப்படுகிறார்களே, போக்லண்ட் தீவுகளிலே, ஆர்ஜன்டீனாவும், பிரிட்டிஷ் அரசும் போராட துருப்புகள் தயாராகின்றனவே! ஐரோப்பா முழுவதிலும் உலகை முற்றாய் அழிக்க வல்ல அணுக்குண்டுகள் அடுக்கிவைக்கப் பட்டிருக்கின்றனவே! என்றால் அவர்கள் மனம் என்னபாடு படும்?

நாமெல்லாம் இன்று இவற்றைக் கொஞ்சங்கூட பரவாய் பண்ணுவதில்லை. வானொலியில் தொலைக்காட்சியில், பத்திரிகையில் படித்துப் புரிந்து ரசிக்கிறதும் உண்டு; ஆனால் மன வேதனைப்படுவதில்லை. எல்லாம் கருணையில்லாத காரணந்தான்.

மனிதன் தோன்றிய காலம் முதற் கொண்டு இன்று வரை எத்தனையோ தத்துவ சாத்திரிகள் உலகின் தன்மையையும், இறைவனின் பண்புகளையும் ஆராய்ச்சி முறையில் அளந்து விடலாம் என்று நம்பினார்கள். அவர்களின் முயற்சியையும் அதனால் ஏற்பட்ட திமிரையும், எங்கள் காலத்தில் வாழ்ந்த உலகங் கண்ட மிகப்பெரிய விஞ்ஞானி ஐன்ஸ்டைன் தம்முடைய ஆராய்ச்சியால் வேரோடுபிடுங்கி எறிந்து விட்டார்.

விஞ்ஞானிகளிடத்தில் இதற்கு முன்னில்லாத பண்பு பிறப்பதற்கு அவரே காரணமாயிருந்தாரென்றால் அது மிகையாகாது.

''நாம் அறிந்த உலகத்தின் எல்லையில் நின்றுகொண்டு அறியாத உலகத்தை எட்டிப்பார்க்கும் போது, அதன் பிரம்மாண்டமும், அகண்டமும் நம்மைத் திணறடிக்கிறது. நமது அறியாமையை நினைக்கும் போது குடல் பதறுகிறது'' என்று சொன்னார் ஐன்ஸ்டைன்.

மகாத்மாகாந்தி குண்டுக்குஇரையாகிஇறந்தபோது ''இத்தகைய மாமனிதன் உலகில் உயிர் வாழ்ந்தானென்று பின்வரும் சந்ததியினர் நம்புவது மிகக்கடினமென்று சொன்னவரும் அவரே!

விஞ்ஞான உலகமே ஒப்புக்கொள்ளும் ஆத்மிக பண்புகள் இன்றைய உலகில் அருகி வருவதை நினைவூட்டும் நாளாகவே இத்தகைய சர்வதேச முக்கியத்துவம்பெற்ற பெரிய வெள்ளி இருக்கின்றது.

இத்தகைய தினங்களில் உலகம் கண்ட தீர்க்க தரிசிகளை நாம் போற்றுவதில் பின்னிற்பதில்லை. கோவில் கட்டி, பூசை செய்து, சமாதி வைத்து, சிலை எழுப்பி, படங்கள் தூக்கி, இவர்களே எம்முடைய இரட்சகர்கள் என்று நாளாந்தம், மாதாந்தம். வருடாந்தம், கொண்டாட்டம் நிகழ்த்தும் சாமர்த்தியம்இன்னும்குறையவில்லை.

உண்மையில் இதன் கருத்தென்ன? ''நீங்கள் தெய்வத்தின் அவதாரங்கள்; உங்கள் போதனையை உச்சிமேல் வைத்துப் பாராட்டுகின்றோம். ஆனால் நாம் சாமனிய மனிதர்; சாதனையை எதிர்பாராதீர்கள்'' என்ற அளவிற்கு சமயங்களும் அவற்றின் போதனைகளையும் மதிக்கின்றோம்!

இந்த நிலைமாற இருள் ஒழிந்து எழில் மயமாக எங்கும் எதிலும் இறையருள் தன்மையைக் காணும் சக்தியை சமயநெறி உயிர்த் துடிப்புடன் இயங்கவேண்டும்.

## கல்லூரியில் நூலகவிழா

[சுழிபுரம்]

காரைநகர் இந்துக் கல்லூரி நடராசர் மண்டபத்தில் நேற்றும் இன்றும் நூலக விழா நடைபெறுகிறது நூலகக் காட்சியை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு. ச. அருணசலம் ஆரம்பித்து வைத்தார். இக்காட்சி இரு தினங்கள் மட்டும் நடைபெறும்.

### சிறிமா — இந்திரா

# "குடும்ப அரசியலில் தென்றலும் புயலும்"

உலகத்திற்கு முதன் முதலில் பெண் பிரதமர்களை அறிமுகப்படுத்திய பெருமை ஆசியாக்கண்டத்திற்கே உண்டு. சகல மதங்களையும் உலகத்திற்களித்த பெருமையும் அக்கண்டத்திற்குத்தான் உரியது. 'இ' கரத்துடன் ஆரம்பிக்கும் இலங்கை 'இ'ந்தியா, 'இ'ஸ்ரேல் ஆகிய நாடுகள் விதவைகளாகவே உலகத்திற்கு பெண் பிரதமர்களை அளித்தன. இம் மூன்று பிரதமர்களும், தங்கள் அரசியல் வாழ்வில் பெரும் சூறுவளிகளைச் சந்தித்தவர்கள்! ஏன் தனிப்பட்ட வாழ்விலும் கூட! இன்று திருமதி சிறிமாவோ அம்மையார் வீட்டில் தென்றலும், திருமதி இந்திராகாந்தி அம்மையார் வீட்டில் புயலும் வீசுகின்றது. ஆனால் அரசியல் வானில் தென்றலும், புயலும் சுழலும் சக்கரங்களே.

### சிறிமா-இந்திரா சந்திப்பு

சிறிமாவோ அம்மையார் வீட்டில் வீசிய புயல் தென்றலாக மாறுகின்றது. தாயும்-மகனும் அரசியல் வானில் பிரிந்து சிலகாலம் செயற்பட்டபோது ''புதுடில்லி''சென்று சிறிமா அம்மையார் செய்த புகாரையடுத்து மகன் அனுரா அங்கு அழைக்கப்பட்டு தாய்க்கும் பிள்ளைக்குமிடையில் 'ஒற்றுமை'யையேற்படுத்திவெற்றி கண்டவர் 'இந்திரா' என சில பத்திரிகைகள் இங்கு செய்தி வெளியிட்டன. இந்திரா சிறிமா இரு அம்மையார்களின் குடும்பங்களுக்குமிடையில் பல ''ஒற்றுமைகள் இருக்கின்றன.

### குடும்ப ஒற்றுமைகள்

பண்டாரநாயகா நேரு இருவரும் ''பாண்டுங்'' மாநாட்டின் மூலகர்த்தாக்கள். இருவரும் ஜனநாயக சோஷலிச அமைப்பு நாட்டில் மலரவேண்டும் என்ற ஆவல் கொண்டிருந்தவர்கள். அக்குடும்பங்களிலிருந்துதான் ''பெண்கள்''நாட்டின் தலைவிகளாக உதித்துள்ளனர். சிறிமா—இந்திரா இருவரும் ஐக்கிய சோவியத் சோஷலிச குடியரசின் மீது பற்றுக் கொண்டவர்கள். விஞ்ஞான சோஷலிசத்தை தங்கள் நாடுகனில் காண விரும்புபவர்கள். சிறிமா அம்மையார் பல காலம் அவசரகாலத்தை அமுலில் வைத்திருந்ததாகவும் பதவிக்காலத்தில் பல அதிகார துஷ்பிரயோகங்களைச் செய்ததாகவும் ஜே. ஆர். அரசினால் குற்றம்சாட்டப்பட்டு ஜனாதிபதி ஆணைக்குழு முன் நிறுத்தப்பட்டு குற்றவாளியாகக் காணப்பட்டு குடியுரிமையை இழந்துள்ளார்.

இந்திரா அம்மையாரும் தனது பதவிக்காலத்தில் அவசரகாலத்தை பல காலம் அமுலில் வைத்திருந்ததாகவும், அதிகார துஷ்பிரயோகம் செய்ததாக 'தேசாய்' அரசினால் குற்றம்சாட்டப்பட்டு சிறைக்குக்கூட அனுப்பப்பட்டவர். தனது மகனை 'அநுராவை அரசியலுக்கு இழுத்து வந்து தனக்கு பின்பு 'அனுரா' தலைவராக வர வேண்டுமென பகீரதப் பிரயத்தனம் செய்தார் சிறிமாவோ. 'சஞ்சய்' தனக்குப் பின்பு தலைவராக வர வேண்டுமென பகீரதப் பிரயத்தனம் செய்தார் இந்திரா. அனுரா சுதந்திரக் கட்சியின் வாலிப முன்னணித் தலைவராக்கப்பட்டார் இங்கு. காங்கிரஸ்கட்சியின் வாலிப முன்னணியின் தலைவராக்கப்பட்டார் சஞ்சய் அங்கு. சஞ்சயும்—அனுராவும் 'முக்கிய புள்ளிகளாக' தங்கள் 'அன்னை'மாரின் ஆட்சியில் திகழ்ந்தனர். சிறிமா—இந்திரா இருவருக்கும் அடுத்தடுத்து அரசியல் கலந்த குடும்பப் பிரச்னை ஏற்பட்டிருக்கிறது. இந்த விடயத்திலும்கூட அவர்கள் இருவருக்கும் விதிவிலக்கில்லை.

### மாமி - மருமகள் சண்டை

'றேஸ் மீட் பிளேசில்' (சிறிமா அம்மையாரது இல்லம் உள்ள இடம்) வீசிய 'புயல்' பாக்கு நீரிணையைக் கடந்து 'புதுடில்லியில்' வீசத் தொடங்கிவிட்டது. பருவகால மாற்றம் போலும். இந்ரா—மேனகா பிரச்னை 'பூதாகாரமெடுத்து'விட்டது. அனுரா—சிறிமா பிரச்னை இலங்கை அரசியலிலும், பத்திரிகையிலும் முக்கிய இடம் பிடித்தது போல் இந்தியாவில் இந்திரா—மேனசா பிரச்னை இந்தியப் பத்

**அராலியூர்க் குரு**

திரிகைகளிலும், இந்திய அரசியலிலும் முக்கிய பிரச்னையாகிக் கொண்டிருக்கின்றது. மாமி — மருமகள் சண்டை பொதுவாக உலக ரீதியான உண்மைபோல் தெரிகிறது. மருமகள் என்றால் நிச்சயம் மாமியின் கண்டிப்பு உண்டு போலும். (சிறிமாவின் மகளின் கணவன் ரூபசிங்காவும் குடும்பத்திலிருந்து ஒதுங்கிவிட்டார்.)

### நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள்

தனக்கு எதிராக பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்களைத் 'தோல்வியில்' முடியச் செய்தார் பிரதமர் இந்திரா. ஆனால் தனது மருமகள் மேனகா மீது வெகு சுலபமாக 'நம்பிக்கையில்லாத் தீர்மானம்' நிறைவேற்றியதோடல்லாமல் மேனகாவுக்குப் 'பிரிந்து' போகின்ற உரிமையுமல்லவா கொடுத்துவிட்டார் மாமி இந்திரா. 'நேரு' குடும்பத்தில் மருமக்கள் 'கசப்பாகவே' காலத்துக்குக் காலம் இருந்து வருகிறார்கள். நேருவுக்கும்—மருமகனுக்கும் [இந்திராவின் கணவரான பெரோஸ் காந்தி] இடையில் 'பிரிவினை'. கணவனிடம் இருந்து பிரிந்த இந்திரா தந்தையின் அரவணைப்பில் இருந்தார். ஆனால் இன்று மேனகாவோ தனது 2 வயதுப் பிள்ளை வருண் பெரேஸுடன் ஒரு ஹோட்டலில்! மருமகள் இந்திராவும் மாமி பண்டிட் விஜயலட்சுமியும் (நேருவின் சகோதரி); இருவரும் கீரியும் பாம்பும். புகழ் பூத்த நேரு குடும்பத்தில் 'மருமக்கள் கசப்பு' ஒரு 'திருஷ்டி பரிகாரம்' போலும்!

### மேனகா பிரச்சினை

மேனகா சஞ்சய் காந்தியை 1974ம் ஆண்டு திருமணம் செய்ததிலிருந்து 'மாமி மருமகள் யுத்தம்' பல வடிவத்தில் நடந்துவந்திருக்கிறது போல் தெரிகிறது. பிரச்சனைகளுக்கு மத்தியில் பிரச்னைக்குரியவர்களினால் நடாத்தப்பட்ட பிரச்சனையான 'லக்னோ' மாநாட்டில் மேனகா கலந்துகொண்டதனால் இந்திரா எரிமலையானார். இந்திராவினால் கட்சியிலிருந்த நீக்கப்பட்ட அக்பர் அஹமது என்பவரின் மகனே இந்த மாநாட்டையும் ஒழுங்கு செய்திருந்தார். ''இறந்த கணவரின் இலட்சியங்களை பரப்பமுனையும் ஒரு மாநாட்டில் பங்குபற்றியதில் என்ன தவறென்பதே'' மேனகாவின் பதிலாக அமைகின்றது. கட்சிக்கு விசுவாசமாக நடவாத காரணத்தால் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களினதும், தன்னை தனிப்பட்ட முறையில் 'விமர்சி'ப்பவர்களதும் மாநாட்டுக்கு மருமகள் மேனகா எவ்வாறு செல்ல முடியுமென்பதே' இந்திராவின் கேள்வியாக இருக்கின்றது.

'அரசியலில் ஈடுபடுவீர்களா' என செய்தியாளர்கள் மேனகாவை வினவியபோது ''எதிர்காலம் எப்படியிருக்குமென்பது யாருக்குத்தெரியும்'' என அளித்த பதில் காலப்போக்கில் அரசியலில் இறங்கும் 'தொனி' ஒலிக்கிறது. மேனகா தனித்தவர் அல்ல; சஞ்சய் காந்தியின் ஆதரவாளர்களும் இவர் பக்கம், மக்கள் அனுதாபமும் இருக்கச் செய்கிறது.

மேனகாவுக்கு இருக்கிறதே 'சூரியா' (மேனகா இச் சஞ்சிகையின் ஆசிரியராவார்) மேனகா அரசியலில் பிரவேசம் செய்தால் அது வீராங்கனை இந்திராவுக்கு சவாலாக அமையலாம்.

## எஸ். ஜே. வி. பிறந்த தினம்

(மன்னார்)

மன்னார்—விடத்தல்தீவு திறந்தவெளியரங்கில் எதிர்வரும் 17ம் திகதி அமரர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் பிறந்ததினவிழா நடைபெறும். இவ்விழாவல் சட்டத்தரணி சந்திரகாசன், திரு. கோவை மகேசன், திரு. ஈழவேந்தன், திரு. பொன். பூலோகசிங்கம், திரு. யேசுதாசன் ஆகியோர் உட்படப்பலர் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள்.

## பாணவிடை சிவன்கோவில் திருவிழா

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பாணவிடைச் சிவன் தேவஸ்தான மகோற்சவம் இம்மாதம் 10ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 20ம் திகதி பூங்காவனத் திருவிழாவோடு முடிவடையவுள்ளது.

இம்மாதம் 18ம் திகதி தேர்த் திருவிழாவும் 19ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. தீர்த்தத் திருவிழாவன்று எழுபதாவது வருடமாக திருநாவுக்கரசு நாயனார் குருபூசை கொண்டாடப்பட்டு அடியார்களுக்கு இரவும் பகலும் அன்னதானம் வழங்கப்படவுள்ளது.

எழுபது ஆண்டுகளுக்குமுன் சிவக்கன்று க. மருதப்புசுவாமிகளால் ஆரம்பித்து நடத்தப்பட்டுவந்த இக்குருபூசை அவரது மறைவுக்குப்பின் தற்போது ஆலயபரிபாலன தர்மகர்த்தா சபையினரால் நடத்தப்பட்டு வருகின்றது. வழமைபோல் இக் குருபூசைக்கு திரளும் ஆயிரக்கணக்கான அடியார்களுக்குரிய சகல வசதிகளையும் செய்வதற்குரிய ஏற்பாடுகளை ஆலய பரிபாலன தர்மகர்த்தா சபையும் புங்குடுதீவு இளந்தமிழர் மன்றமும் இணைந்து ஊரைதீவு கிராம முன்னேற்றச் சங்கம் மடத்துவெளி சனசமூக நிலையம் ஆகியவை மேற்கொண்டு வருகின்றன. கொடியேற்றத்தன்றும் தேர்த்திருவிழாவன்றும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படவுள்ளது.

# பிரிட்டன் யுத்தப் பிரகடனம்!

## போக்லண்ட் தீவை சுற்றியுள்ள பகுதியில்!

லண்டன், ஏப். 8

**போக்லண்ட் தீவைச் சற்றியுள்ள இருநூறுமைல் பகுதி யுத்தப்பகுதியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.**

**இப்பிரகடனம் எதிர்வரும் திங்கட்கிழமை பன்னிரண்டாம் திகதி முதல் அமுலுக்கு வரும் என்று பிரிட்டிஷ் ஆசாங்கம் நேற்றிரவு அறிவித்தது.**

இதற்கிடையே போக்லண்ட் தீவை நோக்கி பிரிட்டிஷ் அரசாங்கத்திஞல் அனுப்பிவைக்கப்பட்ட 36 போர்க்கப்பல்களும் அநேகமாக எதிர்வரும் திங்கட்கிழமை அத்தீவைச் சென்றடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போர்க்கப்பல்களில் ஐயாயிரம் துருப்புக்கள் இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

நிலைமை இவ்வாறிருக்க போக்லண்ட் தீவைக் கைப்பற்றியுள்ள ஆர்ஜென்டீனத்துருப்புக்கள் அங்கு உஷார் நிலையில் இருப்பதாகவும் நிலைமையைச் சமாளிக்கத் தயார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனின் புதிய நடவடிக்கை பற்றி பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜோன்நொட் நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையில், போக்லண்டைச் சுற்றியுள்ள பகுதி யுத்தப்பகுதியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்றும் இதன் விளைவுகளுக்கு ஆர்ஜென்டீஞவே பொறுப்பேற்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

பொது அறிவைவளர்க்க

## குழந்தைகளுக்கென்று பத்திரிகைகள் வேண்டும்!

--பேராசிரியர் நந்தி

(யாழ்ப்பாணம்)

''குழந்தைகளுக்கென்று நல்ல பத்திரிகைகள் எம்மத்தியில் இன்னும்வெளிவரவில்லை. வெளிவருவன வெல்லாம் வெறும் பிசாசுக்கதைகளையும், ராஜாராணிக் கதைகளையுமே கொண்டு விளங்குகின்றன. இதஞல் எமது குழந்தைகளின் பொதுஅறிவு வளர்ச்சி பெரிதும் பாதிப்படைகின்றது''

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவத்துறைப் பேராசிரியர் சிவஞானசுந்தரம், கடந்தசெவ்வாய்க்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியினர் தமது கல்லூரிக் கட்டிட நிதிக்காக யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நிகழ்த்திய கதம்ப நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திருமதி அ. இராசரத்தினம் தலைமையில் இடம்பெற்ற இக்கதம்பநிகழ்ச்சியில் பேராசிரியர் சிவஞானசுந்தரம் மேலும் பேசுகையில்; 'அண்மையில் நான் உதவி வைத்தியர்கள் தேர்வுக்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றில், பரீட்சை நடத்துனராகக் கடமையாற்றினேன். அந்நேர்முகப்பரீட்சையில் அதிசிறந்ததரங்களைப் பெற்றோரையும், சாதாரண தரங்களைப் பெற்றோரையும் பரீட்சித்தேன். அவர்களில் அதிசிறந்த தரங்களைப் பெற்றிருந்தோர் தாம் கற்ற கல்விசம்பந்தப்பட்டனவற்றுக்கு மட்டுமே பதிலளித்தனர். ஆனல் சாதாரண தரங்களைப் பெற்றிருந்தோர் பொதுஅறிவில் திறமையாக விளங்கியதை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. இவர்கள் தமதுசுற்றுடல் பற்றியும் சர்வதேச சம்பவங்

(6ம் பக்கம் பார்க்க)

## ஆணையாளர் அறிக்கையினுல் உள்ளூர் மீனவர் பாதிப்பு!

### கடற்றெழில் அமைச்சருக்கு கோரிக்கை

(மன்னர்)

''மன்னார்—உள்ளூர், வெளியூர் மீனவர்கள் தொடர்பாக கடல்தொழில் அமைச்சிஞல் மேற்கொள்ளப்பட்ட விசாரணை இறுதியில் விசாரணையை மேற்கொண்ட ஆணையாளர் திரு. எஸ். ஜே. எம். ஜி. எஸ். முத்தனுயக்காவிஞல் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மூலம் உள்ளூர் மீனவர்கள் பாதிப்படைய நேரிடும். ஆதலால் இவ்வறிக்கை மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் 75 ஆம் ஆண்டுக்கு முன்னர் வந்த மீனவர்களைத் தவிர 75 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மன்னருக்கு மீன்பிடிக்க வந்த மீனவர்கள் மன்னார் மாவட்டத்தில் மீன்பிடி தொழில் செய்வது தடைசெய்யப்படவேண்டும்''.

இவ்வாறு கடல்தொழில் அமைச்சரைக் கோருவதென்று மன்னார் கச்சேரியில் மன்னார் அரசாங்க அதிபர் திரு. டி, வாமதேவன் தலைமையில் நடைபெற்ற மன்னார் மாவட்ட மீன்பிடி தொடர்பான கருத்தரங்கில் தீர்மானிக்கப்பட்டது.

இக்கருத்தரங்கில் மன்னார் எம். பி. திரு. பி. எல். சூசைதாசன் மன்னார்மாவட்டஅபிவிருத்திசபைதலைவர்திரு. பி எம். சேபமாலை, மன்னார் திட்டமிடல் பணிப்பாளர் திரு. எஸ். தீவகலால், மன்னார் உதவி அரசாங்க அதிபர் திரு. வி. வைரமுத்து, முசலி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சண்முகம், அடம்பன் உதவி அரசாங்க அதிபர் திரு. ஜி. கிருஸ்ணமூர்த்தி ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

''மன்னார் மாவட்டத்தில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தியடையாத நிலையிலுள்ள மீனவர் வீடமைப்புத் திட்டங்களைப் பூர்த்திசெய்ய வேண்டுமெனவும் மன்னார் மாவட்டத்தில் மேலும் ஒரு மீனவர் வீடமைப்புத் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமெனவும் கடல் தொழில் அமைச்சர் கோருவதென்றும் இக்கருத்தரங்கில் தீர்மானிக்கப்பட்டது.

மாஸ்கோவில் மே மாதம்

## அனைத்துமதத்தலைவர்களின் சர்வதேச மகாநாடு

தாஷ்கண்ட். ஏப், 8

''எந்தவிதமான் பாகுபாடுமின்றி சகல மதத்தினரும், உலகை அச்சுறுத்திவரும்அணுவாயுதப் போர் ஆபத்தை எதிர்த்துப்போராட அணிதிரள வேண்டும்.'' என்று ஷேக் யூசுப்கான் ஸாஹிரோல் தெரிவித்துள்ளார்.

மத்திய ஆசியா கஸாகிஸ்தான் முஸ்லிம் வாரியத்தின் உபதலைவரான ஷேக் யூசுப்கான் மாஸ்கோவில் நடைபெறவுள்ள சர்வதேச சமாதான மாநாடு பற்றி கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

இம்மாநாட்டில் 500 முஸ்லிம், கிறிஸ்தவ, ஹிந்து, பௌத்த மற்றும் மதத்தலைவர்களும் ஊழியர்களும் கலந்துகொள்வார்கள்'

''வாழ்க்கை புனிதமானது இஸ்லாம் இதை வலியுறுத்துகிறது. எமது நபிகள்நாயகம் (ஸல்) பெருமானர் மக்களிடையே நேச உறவுகளை பெரிதும் மதித்தார்கள், நேசமாக, சமாதானமாக வாழும்படி மக்களுக்கு திருக் குர் ஆன் திரும்பத்திரும்ப கட்டளையிடுகிறது.'' என்று தெரிவித்த அவர் '.இஸ்லாத்தின் அடிப்படைப் போதனைகளில் ஒன்று தேசங்களிடையேயும் நட்புறவை வளர்த்து சாந்தியைப் பேணுவது. இது, முஸ்லிம்கள் அல்லாத மக்களுடன் வைத்துக்கொள்ளும் உறவுக்கும் பொருந்தும். அணு யுத்தம் ஏற்பட்ட ஒரு சில நிமிஷங்களில் சர்வநாசமேற்படுவது திண்ணம். பலலட்சம் மக்கள் மடிவார்கள். மனிதன் யுவ காந்திரமாககட்டி, செழுமைப்படுத்திய நாகரிகம், மண்ணோடு மண்ணுகிவிடும்'' என்ருர்.

அகில ருஷ்யாவின் வைதிக கிறிஸ்தவ திருச்சபையின் தலைவர் வனபீமனின் முயற்சியால் ஏற்பாடாகியுள்ள இம் மாநாட்டில் ஸ்ரீலங்கா, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் பிரதிநிதிகளும் கலந்துகொள்கின்றனர்,

## ஆத்மீக உணர்வு ஏற்பட இந்துக்கள் விழிப்படைய வேண்டும்!

### சுவாமி சித்ரூபானந்தா உரை

(புலோலி)

''இந்துக்கள் வெறும் வெளிச்சடங்குகளில் மாத்திரம் ஈடுபாடு கொண்டிருப்பதால் ஆத்மீக உணர்வு பெற முடியாதவர்களாக இருக்கின்றனர். அவர்களுக்கு மனச்சாந்தியும் இல்லை. எனவே இந்துக்கள் விழிப்படைய வேண்டும். அப்போது ஆத்மீக உணர்வு ஏற்படும் மனச்சாந்தியும் கிடைக்கும்''.

இவ்வாறு பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இந்து மகாசபையினல் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய சுவாமி சித்ரூபானந்தா குறிப்பிட்டார். அதிபர் திரு. ஈ. கனகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய சுவாமி சித்ரூபானந்தா குறிப்பிட்டதாவது:

சுவாமி விவேகானந்தரைப் போன்ற ஒரு துறவியை நாம் காணமுடியாது. பாரத நாடு தந்த மாபெரும் இந்து சமயத் துறவியே சுவாமி விவேகானந்தராவர்.

சமயம் என்ருல் வெறுஞ் சடங்கல்ல. அனுஷ்டானத்திற்குச் சமயத்தைக் கொண்டு வரவேண்டும். இன்றைய நிலையிலே இந்து சமயத்தவர்கள் வெளிச்சடங்குகளில் மாத்திரம் ஈடுபாடு கொண்டிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. இதஞல் ஆத்மீக உணர்வு, மனச்சாந்தி என்பன அவர்களுக்குக் கிடைப்பதில்லை எனவே இந்து மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி ஊட்டப்படவேண்டும்.

இன்று உலகத்திலே மிகச் சிறந்த நூலாகப் பகவத்கீதை கணிக்கப்படுகின்றது. இது வாழ்க்கையின் தத்துவத்தினை விளக்கும் ஒரு பொதுநூலாகும். மக்கள் சுயநலப்பற்று போக்கிப் பொதுநலப்பற்றுடன் வாழும்போது கிடைத்தற்கரிய இன்பத்தைப் பெற முடியும்.

சமயம் புகட்டும் ஆழ்ந்த கருத்துக்களை உணர்ந்து வாழ வேண்டும். இல்லையேல் நாம் சைவர்சள் அல்லது இந்துக்கள் என்று பெருமை கொள்வதில் அர்த்தமில்லாது போய்விடும்'

கீதையை ஆழ்ந்து படியுங்கள். பயன்கிடைக்கும். விவேகானந்தரின் வாழ்க்கை உபதேசங்கள் அடங்கிய எட்டு அத்தியாயங்களில் ஒன்றையாவது ஆழ்ந்து படியுங்கள்.

## ''இலங்கை -- சோவியத் ஒத்துழைப்பில் புதிய உத்வேகம்''

### நட்புறவுக்கழக மகாநாட்டில் கருத்து!

மாஸ்கோ, ஏப் 8

மாஸ்கோ நட்புறவு மாளிகையில் நடைபெற்ற சோவியத்—இலங்கை நட்புறவுச் சங்கத்தின் 5வது அகில யூனியன் மகாநாட்டில்; மாஸ்கோ உஸ்பெகிஸ்தான், எஸ்தோனியா, தாஜிகிஸ்தான் குடியரசுகளின் தாய்ச்சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

கழகத்தலைவரும் சோவியத் சமஷ்டியின் மீன்பிடித்துறை அமைச்சருமான நிகோலாய் வன்யாயேவ் தலைமையில் இம் மகாநாடு நடைபெற்றது. கடைசியாக நடைபெற்ற நாலாவது மகாநாட்டுக்குப் பின்னர் சோவியத் இலங்கை நட்புறவு மேலும் வலுவுள்ளதாகக் கூறிய அவர், இவ்வருடம் இலங்கையின்சுதந்திர தினமும், ராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்டதன் 25 ஆண்டு பூர்த்தியும் நாட்டின் பல பாகங்களில் கொண்டாடப்பட்டதென்றும் தெரிவித்தார்.

இலங்கை ஸ்தானிகராலயப் பொறுப்பதிகாரி திரு காசிசெட்டி தமது உரையில் இரு நாடுகளின் உறவுகள் பரஸ்பரம் பயனுடையதாகவும் எமது சமூக அரசியல் அமைப்புகள் வேறுபட்டுள்ளதாக இருந்த போதிலும் நாம் ஒத்துழைத்து வருவது விசேஷ முக்கியத்துவமுடையதாகும் என்றும் கூறினர்.

''புதிய கடல்போக்குவரத்து உடன்படிக்கையும் விஞ்ஞான கலாசார உடன்படிக்கையும் கைச்சாத்தான பின்னர் இந்த ஒத்துழைப்பு உத்வேகமடைந்துள்ளது'' என்றும் அவர் கூறினர்.

ஆசியாவிலும் உலகிலும் நிலையான சமாதானத்தை நிலைநாட்டும் முகமாக நேச தொடர்புகளைவைத்துக்கொள்வதுஅவசியம்என்று (இலங்கை மக்களைக் கேட்டுக் கொள்ளும்) வேண்டுகோள் மகாநாட்டின் இறுதியில் நிறைவேற்றப்பட்டது.

## நிகழ்ச்சி இரத்து

(சுழிபுரம்)

அமெரிக்காவிலிருந்து வருகை தந்த ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்தைச் சேர்ந்த சிவமுருகநாதசுவாமி சிவமுருக சுவாமிசேயோன் சுவாமிஆகிய மூவரும் இம்மாதம் 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வழக்கம்பரை அம்மன் கோவிலுக்கு வருகைதந்து அருளுரை நிகழ்த்த இருந்த நிகழ்ச்சி இரத்து செய்யப்பட்டுள்ளது. இவர்கள் உடன் அமெரிக்கா செல்லவேண்டியுள்ளதால் நிகழ்ச்சி இரத்து செய்யப்பட்டது.

### இன்று திருப்பாடுகளின் வெள்ளி

# உலக மீட்புக்காக இயேசு தம்மைப் பலியாக்கிய தியாகத் திருநாள்

இன்று ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையிலும் மிகப்புனிதமான நாள். ஆண்டவர் நம்முடைய மீட்புக்காகத் தம் உயிரைப்பலியாக்கிய தியாக நாள். சிலுவை மரணம் வழியாக உலகம் முழுவதற்கும் விடுதலைபெற்றுத்தந்த நாள.

இன்றைய வழிபாட்டில் சிலுவை முக்கிய இடத்தை வகுக்கின்றது. சிலுவைவழி செல்லாது கிறிஸ்துவைப் பின்செல்ல முடியாது. ''என்னைப் பின் செல்லவிரும்புகிறவன், தன்னையே மறுத்து தன் சிலுவைகளைச் சுமந்துகொண்டு என்னைப்பின் தொடரட்டும்'' என்கிறார் இயேசு

இயேசுவும் துன்பத்தைஏற்று சிலுவையே மீட்பின் வழி என்பதைத் தம் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டினார். நான் ஒருவழிகாட்டி எனக்கூறவில்லை மாருக ''நானே வழி'' என்றார். நான் உண்மையை உரைப்பவன் என்று கூற வில்லை. மாருக ''நானே உண்மை'' என்றார் என்னிடத்தில் வாழ்வு உண்டு என்று கூறுவில்லை. மாருக ''நானே வாழ்வு'' என்றார். ஆம், உயிராக, வழியாக, வாழ்வாக விளங்கும் இயேசு நம் அனைவருக்கும் காட்டிய வழி சிலுவை வழி.



சிலுவையைச் சுமந்துசெல்ல மனதில்லாதவன் கிறிஸ்துவின் பின் செல்ல முடியாது சிலுவை தான் நமக்கு இன்பத்தைப் பெற்றுத்தரும். நமது வாழ்விலும் கால மாறுபாட்டால், கடமைவேறுபாட்டால் துன்பங்கள் நேரிடலாம். சிக்கல்கள் தோன்றலாம், அப்போது மனம் தளராது சிலுவை என்னும் கழுமரத்தைச்சுமந்து கல்வாரியில் உயிர்கொடுத்த இயேசுவை எண்ணுவோம். அவரை அணுகுவோம். நம்பிக்கையுடன் நோக்குவோம். வாழ்வு பெறுவோம்.

நமக்காக நம்மேல் வைத்த அன்பிற்காக, நம் பாவங்களுக்குப் பரிகாரமாக தன்னையே பலியாக இரத்தம் முழுவதும் சிந்தி ஒப்புக்கொடுக்கிறார். இசையாஸ் இறைவாக்கினர் கூறியதுபோல ''மெய்யாகவே நம்முடைய பிணிகளை ஏற்றுக் கொண்டார். நம்முடைய நோய்களைச் சுமந்து கொண்டார். நம் பாவங்களுக்காகவே அவர் காயப்பட்டார'' நம் அக்கிரமங்களுக்காகவே அவர் நோறுக்கப்பட்டார்.''

ஆம் இயேசு நம்மேல்வைத்த அன்பைச் செயலில் காட்டிவிட்டார். அவர் கூறியபோதனைகளைச் சாதித்துக்காட்டிவிட்டார்.

ஒருவர் ஒருவருடைய பாதங்களைக் கழுவுங்கள், ஒருவரை ஒருவர் மன்னியுங்கள் என்று கூறியவர் தானே சிலுவையில் இத்தனை வேதனைகளுடன் தொடங்கிய வேளையிலும், ''பிதாவே இவர்களை மன்னியும், இவர்கள் இன்னது செய்கிறார்கள் என்று தெரியாமல் செய்கிறார்கள்'' என்று தந்தையிடம் மன்றாடுகிறார். இயேசுவின் அன்டக்கட்டளை நம்மையும் பிறருக்காகத் தியாகம் செய்ய, உயிரையே கொடுக்கத் தயாராகவேண்டும் என்று கூறுகிறது,

''கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தாலொழிய பலன் தராது'' ஆம், இயேசு கடைசி இராவில் ஏற்படுத்திய பூசைப்பலியை சிலுவையில் இரத்தம் சிந்தி தன்னை முழுமையாக பலியாகக் கல்வாரி மலையில் சிலுவையில் ஒப்புக்கொடுக்கிறார். மரணத்தைத் தாழ்மையாக ஏறறுக்கொண்டார். எல்லாம் நிறைவேற்று என்று தன்னையே பலியாக்கிப் பிட்டு உலக மக்கள் அனைவருக்கும் கொடுக்கிறார் எனவே நாமும்...

கிறிஸ்துவைப்போல் துன்பத்தை இறைவனுக்குப் பலியாக ஒப்புக்கொடுக்கவேண்டும் இதுதான் நாம் இறைவனுக்குச் செலுத்தும் ஞானப்பலி.

— எம். எம். வில்பிறெட்.

## கப்பல் தினவிழா

(மன்னார்)

தலைமன்னார் துறைமுகத்தில் கப்பல் தினவிழா கடந்த திங்கட்கிழமை சிறப்பாகக்கொண்டாடப்பட்டது.

தலைமன்னார்—ராமேஸ்வரம் கப்பலின் மேல்தளத்தில் இடம் பெற்ற இவ்விழாவில் மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன், மன்னார் அரசாங்க அதிபர் திரு. டி. வாமதேவன், மன்னார் உதவி பொலிஸ் அத்தியட்சகர் திரு. இராஜேஸ்வரன், மன்னார் திட்டமிடல் பணிப்பாளர் திரு. எஸ். தீவகலால், மன்னார் விவசாய அபிவிருத்தி அதிகாரசபை தலைவர் திரு. எஸ்.பி. பிகிரடோ, மன்னார் மேலதிக அரசாங்கச அதிபர் திரு. ஏ. ஜே. செந்தில்நர்தன், மன்னார் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எஸ். தில்லைநடராசா, நடிகர் சிலோன் சின்னையா. பேசாலை பிரபல தொழிலதிபர் திரு. பீற்றர்குலாஸ், கப்பல் கப்டன் திரு. வீனஸ்மாட்டின், யோசப் பல்டானோ, திரு. சாந்திகுமார்ஆகியோர்உட்பட கப்பல் ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் திரு. சாந்திகுமாரின் பரதநாட்டியமும், நடிகர் சிலோன் சின்னையாவின் ''சாம்ராட் அசோகன்'' என்ற தனி நபர் நடிப்பும் இடம் பெற்றது.

## வைத்தியசாலை அபிவிருத்திபற்றி ஆலோசனை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வைத்தியசாலை அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக் கூட்டம் சாவகச்சேரி வைத்தியசாலையில் வைத்திய அதிகாரி சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

சாவகச்சேரி நாடாளுமன்றப் பிரதிநிதி திரு வ. ந. நவரத்தினம் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு. சி. நவரத்தினம் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராசா ஆகியோர் பங்குபற்றினர்.

வைத்தியதிகாரி திரு. சண்முகநாதன் வைத்தியசாலைத் தேவைகள் பற்றி எடுத்துரைத்தார்.

நடாளுமன்றப் பிரதிநிதி எல்லாவற்றிற்கும் அரசாங்கத்தை மாத்திரம் நம்பியிராது வைத்திபசாலை அபிவிருத்தியில் அக்கறை கொண்ட நலன் விரும்பிகள் கொண்ட ஓர் சபை அமைத்து அவர்களுடைய உதவிகளையும் பெற்று வைத்தியசாலையை அபிவிருத்தி செய்ய ஆவன செய்ய வேண்டும். அதேநேரம் அரசாங்க உதவியையும் தேவை நோக்கிப் பெற்றுத்தர ஆயத்தமாக இருக்கிறேன் என்றார்.

பரிபாலனசபை ஒன்று அமைக்கப்பட்டது.

தலைவர் திரு. நவரத்தினம் அபிவிருத்திச்சபை உறுப்பினர் உப தலைவர் திரு. என். சண்முகநாதன்; சாவகச்சேரி வைத்தியதிகாரி, காரியதரிசி திரு. கே. துரைராசா; உதவி அரசாங்க அதிபர் மேலும் ஐவர் கொண்ட நிர்வாகசபை அமைக்கப்பட்டது.

## பிரஞ்சு அதிபர் ஜப்பான் செல்வார்

லண்டன். ஏப். 7

பிரான்ஸ் ஜனாதிபதி அடுத்த மாதம் உத்தியோகபூர்வமாக ஜப்பானுக்கு விஜயம் செய்யவிருக்கிறார், இருதரப்பு வர்த்தக பிரச்சனை பற்றியும், உறவுகளை வலுப்படுத்துவது பற்றியும் ஆராயப்படும்.

## கட்சி வேறுபாடின்றி நடக்கும் ஊழியர் சங்கம்

(புலோலி)

''தேசிய ஊழியர் சங்கம் (ஜாதிக சேவா சங்கமய எது வித கட்சிவேறுபாடுகளுமின்றி ஊழியர்களின் நலனைக் கருத்திற் கொண்டே இயங்கி வருகின்றது. தேசிய ஊழியர்சங்க உறுப்பினர்கள் அனைவரும் சிறப்பாக இயங்கவேண்டும்.''

இவ்வாறு பருத்தித்துறைக்கு வருகை தந்த தேசிய ஊழியர் சங்க கூட்டுறவுப்பிரிவு அமைப்பாளர்திரு.என்.எஸ்.பெரேரா பருத்தித்துறை ப. நோ. கூ. சங்க தேசிய ஊழியர் சங்க அலுவலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார். இங்குவருகை தந்த திரு. பெரேராவைப் பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கதேசிய ஊழியர் சங்கச் செயலாளர் திரு. சிவபாதசுந்தரம் உட்பட ஊழியர்கள் மலர் மாலை அணிவித்து வரவேற்றனர். ப.நோ.கூ.சங்க தேசிய ஊழியர் சங்கத் தலைவர் திரு. கே. வி. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற்ற இத்திறப்புவிழாவில் தொடர்ந்து உரையாற்றிய திரு. பெரேரா குறிப்பிட்டதாவது:

பருத்தித்துறைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் சிறப்பாக இயங்குவதுடன் பொருளாதார நிலையிலும் சிறப்பாக இருப்பதைக்கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகங்கள் திறம்பட இயங்குமாளுல் அவை மேம்பாடடையும் என்பதில் ஐயமில்லை.

இப் பலநோக்குக்கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் சில குறைபாடுகள், பிரச்னைகள் பற்றி நான் இயக்குநர் சபையுடன் கலந்துரையாடினேன். சங்க மட்டத்தில் தீர்க்கக்கூடிய சகல குறைபாடுகள், பிரச்னைகள் என்பனவற்றினைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென இயக்குநர் சபை உறுதியளித்துள்ளது. அதற்காக இயக்குநர் சபை உறுப்பினர்களுக்கு நான் நன்றி தெரிவிததுக் கொள்கின்றேன்.

தேசிய ஊழியர்சங்கத்திற்கு ஐக்கியதேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, லங்கா சமசமாஜக் கட்சி அல்லது வேறு கட்சிகளோ என்ற எதுவித கட்சி பேதங்களும் இல்லை. எந்தக் கட்சியினராக இருந்தாலும் ஊழியர்களின் குறைபாடுகள், பிரச்னைகளைத்தீர்த்து வைப்பதே தேசிய ஊழியர் சங்கத்தின் நோக்கமாகும். இன்று இங்கு தேசிய ஊழியர் சங்கத்தின் கிளை அலுவலகத்தைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ப.நோ.கூ. சங்க இயக்குநர் சபைத் தலைவர் திரு.கே.துரைராசா, பொதுமுகாமையாளர் திரு எஸ். சதாசிவம் உட்பட இன்னும் பலர் உரையாற்றினர். திரு. செல்வராசா திரு. என்.எஸ்.பெரேராவுக்கு பனை ஓலையால் செய்யப்பட்ட யானைக்குட்டி ஒன்றை அன்பளிப்புச் செய்தார்.

## பனை மரங்களே வேலியாக அமையும்

[புலோலி]

பனம்பொருள் அபிவிருத்திச் சபையினுல் செம்பியன்பற்றில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பனைப் பெருந்தோட்டத்தில் கட்டம், கட்டமாக பனம் விதைகள் நாட்டப்பட்டு வருகின்றன. அத்துடன் ஊடுபயிராக கற்றாளை, பட்டிப்பூ என்பனவும் பயிரிடப்பட்டு வருகின்றன.

500 ஏக்கரைக் கொண்டதாக அமையவுள்ள இப் பனைப் பெருந்தோட்டத்தைச் சுற்றி வேலிகள் அமைப்பதற்குப் பதிலாக பனம் விதைகள் நாட்டப்பட்டுள்ளன. இப் பனம் விதைகள் வளர்ந்து பனையாகி வேலிகளைப்போல பனைப் பெருந்தோட்டத்திற்கு பாதுகாப்பைக் கொடுக்கும்.

இப் பெருந்தோட்டத்தில் முதல் கட்டமாக 21 ஏக்கர் காணி துப்பரவு செய்யப்பட்டு அதில் 9 ஏக்கரில் தனியே மரமுந்திரிகைப் பயிரும், 12 ஏக்கரில் பனம் விதைகளும் நாட்டப்பட்டுள்ளன. பனம் விதைகள் நாட்டப்பட்ட 12 ஏக்கரில் 6 ஏக்கரில் பனைகளுக்கு ஊடுபயிராகப் பட்டிப்பூ, கற்றாளை என்பனவும் நாட்டப்பட்டுள்ளன.

மிக விரைவில் பனம் விதைகள் நாட்டும் அடுத்தகட்ட வேலைகள் இப் பெருந்தோட்டத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக செம்பியன்பற்று பனைப் பெருந்தோட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. சோ. கோகுலதாசன் தெரிவித்தார்.

## வல்லிபுர ஆழ்வாருக்கு ஒலிபெருக்கி அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைப் பகுதியிலுள்ள ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவிலுக்கு கொழும்பில் உள்ள மின்சார உபகரணங்கள் விநியோகம் செய்யும் பிரபல வர்த்தகர் ஒருவரால் ரூபா 20,000/— பெறுமதியான ஒரு நவீன ஒலிபெருக்கி அன்பளிப்பாக வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நவீன ஒலிபெருக்கிச் சாதனம் முதல்முதலாக எதிர்வரும் 14ம் திகதி புத்தாண்டு தினத்தன்று பாவனைக்குவிடப்படும்.

அன்று மாலை 6 மணி முதல் சின்னமணி குழுவினரின் வில்லிசை இடம்பெறும்.

இத்திருப்பதியில் இராஜ கோபுர வேலைகள் தமிழ்நாட்டு ஸ்தபதிகளால் கட்டப்பட்டு வேகமாக வளர்ந்து வருகிறது. 71 அடிக் கோபுர வேலைகள் அடுத்த வருஷப் பிற்பகுதியில் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## மகாவித்தியாலய வருடாந்த விழா

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய வருடாந்த விழா, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் திரு. ஆ. இராமசாமி தலைமையில் நடைபெறும் இவ்விழாவின் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் இலங்கை வங்கிமுகாமையாளர் க.சுப்பிரமணியம், யாழ்.வளாக விரிவுரையாளர்; ச. விநாயகமூர்த்தி, கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா ஆகியோர் கலந்து உரையாற்றவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து உறுப்பினர் தெரிவும் இடம் பெறவுள்ளது.

## ஆண்டு விழா

(சங்கானை)

சங்கானை ஐக்கிய நலன்புரிச் சங்கத்தின் பத்தாவது ஆண்டு விழா அடுத்த மாதம் எட்டாம் திகதி நடைபெறும்.

ஆண்டு விழாவையொட்டி இம்மாதம் பத்தாம் திகதி கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஆரம்பமாகும்.

## கூட்டம்

(அரியாலை)

யாழ்ப்பாணக் கிறிஸ்த சம்ரட்சணு சங்கத்தின் 90வது வருடாந்தக்கூட்டம் இம்மாதம் 13ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை சங்கப் பணிமனையில் தலைவர் அருட்திரு எஸ். ஜெயநேசன் அடிகளார் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

பங்கு வழங்குதல்
பொழுது நடைபெறுகிறது

# சீமெந்துப் பருந்தொழிலில் நீங்களும் முதலிடலாம்

அதிகரித்துவரும் சீமெந்து தேவையை உள்ளூர் உற்பத்தி சமாளிக்க முடியாமலிருக்கிறது.

இதனையும், காலப்போக்கில் இது மேலும் கூடும் என்பதையும் அறிந்துள்ள இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம், இவற்றை நிறைவேற்றுவதற்காக லங்கா சீமெந்து லிமிடெட்டை ஆரம்பித்துள்ளது.

தொழிற்சாலை, துறைமுகப்பாலம், மற்றும் துணைச்சேவைகளைக் கொண்ட முற்றிலும் தன்னியக்க முறையில் அமைந்த தொகுதி ஒன்றினை, லங்கா சீமெந்து லிமிட்டெட் காங்கேசன்துறையில் பெருமளவிற்குப் பூர்த்திசெய்துள்ளது.

திட்டத்தின் 1 வது கட்ட வேலைகள் இந்த ஆண்டு ஆரம்பித்ததும் 500,000 தொன் உற்பத்தி செய்யப்படும். 1983, ஜூன் மாதத்தில் முடிவடையும் 2 வது கட்டத்தில் உற்பத்தி இரண்டு மடங்காக, அதாவது வருடாந்தம் 10 லட்சம் தொன் உற்பத்தி செய்யப்படும்.

இலாபம் தரும் இந்த முயற்சியில் நீங்களும் சேருங்கள்- ஒவ்வொன்றும் 10 ரூபா பெறுமதியான 1.2 கோடி பங்குகள் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன.
பங்கு வழங்குகையின் மொத்த பெறுமதி 30 கோடி ரூபா. முதல் ஆண்டிலேயே பங்கிலாபம் பெறும் வாய்ப்புண்டு.

## முதலீட்டு நிவாரணமும் வரிச் சலுகைகளும்

- வரிமதிப்பிடற்குரிய வருமானத்தின் 1/3 பகுதிவரை முதலீட்டு நிவாரணம்
- கம்பெனியின் இலாபங்களின் மீது ஐந்து வருட வரி விடுமுறை
- ஐந்து வருடங்களுக்கு பங்கிலாபங்களுக்கு வரி விலக்கு
- வரி விடுமுறைக்குப் பின்னர் குறைந்த வீத வரி மதிப்பு
- வரி விடுமுறைக்குப் பின்னர் பங்கிலாபங்களின் மீதான வரி நிறுத்திவைக்கப்படமாட்டாது
- வதிவு கம்பெனிகள் பெறும் பங்கிலாபங்களுக்கு வரி இல்லை
- மூலதன இலாபங்களுக்கு வரி இல்லை

பங்கு வழங்குதல் மார்ச் 3 முதல் 1982 ஏப்ரல் 30 வரை

முதலீடு செய்வது பற்றிய விபரங்களைத் தரும் முற்பகர்வின் இலவச பிரதிக்கு இங்கு தரப்பட்டுள்ள கூப்பனை அனுப்பி வையுங்கள்.

நிர்வாக ஆலோசனைப் பிரிவு,
இலங்கை வங்கி,411, காலி வீதி,கொழும்பு - 3

லங்கா சீமெந்து லிமிட்டெட் பங்கு வழங்குகை மீதான முற்பகர்வின் பிரதியொன்றையும் பங்குகளுக்கான ..............விண்ணப்பப் படிவங்களையும் தயவு செய்து அனுப்பி வையுங்கள்.

பெயர் : ..............................................

முகவரி: ..............................................

லங்கா சீமெந்து லிமிட்டெட்டுடன் சேர்ந்து
உறுதியான எதிர்காலத்தை கட்டியெழுப்புங்கள்

**லங்கா சீமெந்து லிமிட்டெட்**

அல்மனுர் கட்டிடம்,302, காலி வீதி,
கொழும்பு - 4. தொலைபேசி: 589126



Phoenix

**வெஸ்லி** மானிப்பாய்

11.4.82 வரை
தினசரி 2.30, 6.15, 9.15
துளசிராம், மஞ்சுபார்கவி
**சங்கராபரணம்**

# கலைவிழா

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி நகரமண்டபத்தில் வருடப் பிறப்பு தினத்தன்று கலைவிழா நடைபெறும், கிளிநொச்சி ''றிட்ஸ் றெஸ்லிங் கிளப்பினரின்'' கராட்டி நிகழ்ச்சிகளும் இடம் பெறும். திரு. கே. என். ராஜன் தனது உடம்பில் செடில் குற்றி இரண்டு தொன் எடையுள்ள மோட்டார் வாகனம் இழுக்கும் உலக சாதனையொன்றை அன்றைய கலைவிழாவில்சிறப்பு நிகழ்ச்சியாக செய்யஉள்ளார்.

**ஹரன்** யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
**தங்கத்திலேவைரம்**
[புதிய பிரதி]

# சிலுவைப்பாதை காட்சிகள்

(யாழ்ப்பாணம்)

பெரிய வெள்ளிக் கிழமையைத் தொடர்ந்து இன்று மாலை ஆறு மணி தொடக்கம் இரவு எட்டரை மணி வரை, யாழ். பேராலயத்தின் (கொஞ்சேஞ்சி மாதா ஆலய) முன்றலில் இயேசுக் கிறிஸ்துநாதரின் சிலுவைப் பாதையின் காட்சிகள் காண்பிக்கப்படும்.

**யாழ்.றீகல்**
தினசரி10—30, 2—15, 4—30 7—00, 9—30
8th and 9th
Bradford Vilman in
**PIRANHA**
(Horror under water— Color film)
நீருக்கு அடியில் பயங்கரச் சம்பவங்கள் நிறைந்தது

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
10-30, 2-15, 4-45, 7-00, 9-30
FRED WILLIAMSON in
**THAT MAN BOLT**
Best Karate Film

தினசரி 10.30, 2.30, 6.00 and 9.30
**ராஜா** (யாழ்ப்பாணம்)
Winner of Five Academy Awards
ROBERT DE NERO in
**THE DEER HUNTER**
(Color-Scope, வயதுவந்தவர்களுக்கு மட்டும்)
Based on the Vietnam War

**ராணி** (யாழ்.நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
கமலஹாசன் - ரதி நடித்த
**உல்லாசப் பறவைகள்**
(ஈஸ்ட்மன் கலர்)
அனேக ரசிகப் பெருமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க புத்தாண்டு வரைக்கும் பறந்துகொண்டிருப்பேன்.

**சாந்தி** (யாழ்நகர்) 10—30, 2—00, 4—30, 7—15, 9—45
CHRISTOPER PLUMMER — JAMES MASON
**MURDER BY DECREE**
Suspense—Thrill—Murder (color)

**வெலிங்டன்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
SOLAMAN KING
10.4.82 முதல்
MAN FROM HONG KONG

**லிடோ** தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்)
பச்சைவிளக்கு

**ஸ்ரீதர்** தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
**பொல்லாதவன்**
(ஈஸ்ட்மன் கலர்)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
பெண்குலத்தின் பெருமையை விளக்கும் அற்புதமான வண்ணச் சித்திரம்—ஒவ்வொரு பெண்ணுக்கும் ஓர் ஒப்பற்ற படிப்பினையாக விளங்கும் உன்னத காவியம்—திடீர்த் தீர்மானத்தினல் திரைப்பட நட்சத்திரத்திற்கு ஏற்பட்ட விபரீத முடிவைக் காணத் தவருதீர்—
ஸ்ரீபிரியா—கமல்— ரஜனி— நாகேஷ்—
நடிகர் திலகம் சிவாஜி மற்றும் பல
முன்னணி நட்சத்திரங்கள் நடித்த
★ நட்சத்திரம் ★

# சிறுவர்களை வேலைக்கமர்த்துவது: பொலிசார் உஷார் நடவடிக்கை!

[கொழும்பு]

சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுவதைக் கட்டுப்படுத்தும் வகையில் சட்டரீதியான நடவடிச்கைகளை எடுப்பதற்கு, பொலிசார் சமூக சேவைகள் திணைக்களத்தவரின் உதவியை நாடியுள்ளனர்

பொலிஸ் அதிகாரி யொருவர் இதுபற்றித் தெரிவிக்கையில்; சட்டவிரோதமாகச் சிறுவயதினரை வேலைக்கமர்த்துவது எமது நாட்டில் சகஜமாகக் காணப்படுகிறது கடுமையான சட்டநடவடிக்கைகள் சிறுவர்களை வேலைக்கமர்த்துவதற்காக விதிக்கக்கூடிய வகையில் காணப்பட்டமையாலேயே அநேகமான சிறுவர்கள் வீடுகளிலும், மீன்பிடிக்குமிடங்களிலும் வேலை செய்ய நிர்ப்பந்திககப்பட்டுள்ளனர் என்றுர்.

வீடுகளிலும், மீன்பிடி இடங்களிலும் வேலைசெய்யும் சிறுவர்கள் அனுபவிக்கும், கஷ்டங்கள் துன்பங்கள், மற்றும் அவர்களைப் பராமரிக்கும் முறைகள் பற்றி எமக்கு கணிசமானளவு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. உரிய சட்ட நடவடிக்கை ஏற்படுத்தப்படும் பட்சத்தில் இவ்வாறு சிறுவர்களை வேலைக்கமர்த்தி அவர்களை நோகச்செய்வோரை நீதிமன்றத்தில் நிறுத்துவோம் என்றும் அவர் தெரிவித்தார்.

(கி)

# இன்றைய பலன்

பங்குனி மாதம் 27ம் திகதி
வெள்ளிக்கிழமை
(9—4—82)

மேடம்: இனிமையின் அழைப்பு இன்று உங்களுக்குக் கிடைக்கலாம், இல்லம் பல் கலைக்கழகமாக மாறும் அறிஞர்களின் வருகை உற்சாகத்தைத்தரும். களஸ்திரவழியால் சுகமுண்டு.

இடபம்: மிகவும் வேண்டிய ஒருவரை பகைத்துக் கொள்ள நேரிடலாம் அவசரப் போக்கினுல் ஆபத்துக்கள் விளையும். சகோதர வழியால் சஞ்சலம் ஏற்படும். பொறுமை நன்று.

மிதுனம்: கலைஞர்கள் போற்றப்படுவார்கள். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பும் கிடைக்கலாம். குருவின் ஆசி தாராளமாகக் கிடைக்கலாம். பிதவாழிச் சுகமுண்டு.

கடகம்; தொழில் துறையில் முன்னேற்றம் தென்படும். மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக்கிடைக்கும் வணிகத்துறையில் புதிய தொடர்புகள் ஏற்படும். சிலருக்கு நன்மையான இடமாற்றமும் உண்டு.

சிங்கம்; நிதிநிலையில் விரும்பத்தக்க முன்னேற்றம் உண்டு வணிகர்களாயின் அதிக ஆதாரம் பெறுவார்கள். புதுமையான காரியங்களில் மனதைச் செலுத்துவீர்கள். புத்திரரால் புகழ்வந்து குவியும்.

கன்னி: பணம் பலவழிகளிலும் செலவாகும். அன்னிய நபர் ஒருவரால் ஏமாற்றம் அடையக்கூடும். உமது நடவடிக்கைகளிளை எதிரிகள் வேவுபார்ப்பர் நிதானம் வேண்டும்.

துலாம்: நினைவின் நிழலாட்டம் நிம்மதியைச் சிதறடிக்கும். உறவினர் மத்தியில் பூசல்கள் தலைதூக்கும். அன்னியர்கள் தொடர்பால் சிக்கல்கள் தோன்றலாம். அவதானம் வேண்டும்.

விருச்சிகம்: கன்னல் மொழிபேசி காரியத்தை துதிப்பீர்கள். கவர்ச்சிகரமான சம்பவங்களும் இடம்பெறும். குடும்பத்திலும் அமைதி நிலவும் வெளியூர் நண்பர்களின் வருகை மகிழ்ச்சியைத் தரும்.

தனு: தூக்கம் விழி திறக்கவே மறுக்கும். கடந்தகால எண்ணங்கள் அலைமோதும். அடுத்துக் கெடுப்பதற்கு சிலர் முனைவர். சகோதர வழியால் சஞ்சலமுண்டு.

மகரம்: வாழ்வில் இன்று வெற்றித்திருநாள் ஆகும், எதிலும் அதிஸ்டம் உங்கள் பக்கமே இருக்கும். புதிய பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு நன்று. வெளியிடத் தொடர்புகள் திருப்தியைத்தரும்.

கும்பம்: மற்றவர்களின் இன்னல் கண்டு இரக்கம் காட்டுவீர்கள். தாராளமான குணத்தின் மூலம் தனமும் செலவாகும். புண்ணிய யாத்திரை ஒன்று மேற்கொள்ளப் படலாம்.

மீனம்: இதயம் எரிமலையாகும். எதிரிகள் தாக்குவார்கள். ஏமாற்றத்திற்கும் இடமுண்டு. அதிக பேச்சை தவிர்த்துக் கொள்வது நன்று. அதிலும் உணர்ச்சி வசப்படாது இருக்கவும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## பரு. அரசினர் வைத்தியசாலையில்

# கயரோகத் தடுப்பு சிகிச்சை நிலையம்

(புலோலி)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள கயரோகத் தடுப்புச் சிகிச்சை நிலையம், வடமராட்சி இலங்கைத் தேசிய கயரோகத் தடுப்புச் சங்க அலுவலகம்ஆகியவற்றின்அமைப்பு நடவடிக்கைகள் குறித்தும், நிதி ஒதுக்கீடு சம்பந்தமாக வடமராட்சி இலங்கைத்தேசிய கயோராகத் தடுப்புச் சங்கத்தினர் யாழ், மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கோன் உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம், பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் ஆகியோரிடம் நேரிற்சென்று கலந்துரையாடினர்.

சங்கச்செயலாளர் கிராம சேவை அலுவலர் திரு. வி. சேதுநாயகம் தலைமையில் மத்திய குழு உறுப்பினர்களான கே.யோகேஸ்வரன், வி வயிரமுத்து, இ. வேலுப்பிள்ளை, தோ. செபமாலை ஆகியோரடங்கிய குழுவினரே மாவட்ட அமைச்சருடனும், உடுப்பிட்டி, பருத்தித்துறை எம். பி.க்களுடனும் பேச்சுக்கள் நடத்தினர்.

உடுப்பிட்டி எம். பி. திரு. இராசலிங்கம், சிகிச்சைநிலையமும், அலுவலகமும் அமைக்கப்படுவதற்கு 50,000 ரூபா நிதி ஒதுக்கீடுசெய்துதருவதாக உறுதியளித்துள்ளார். பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினமும் நிதி ஒதுக்கீடுசெய்துதருவதாக உறுதியளித்தார்.

சிகிச்சைநிலையத்தையும், அலுவலகத்தையும் அமைப்பதற்கென யாழ். சுகாதார அத்தியட்சகரின் பணிப்பின்பேரில் இடம் ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளதாகவும்' இக்கட்டிட அமைப்புக்குத்தன்னுல்இயன்ற சகல உதவிகளையும் வழங்குவதாகவும் பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. மயிலேறும் பெருமாள் தெரிவித்தார்.

# தவக்கால நற்சிந்தனை



இன்று கிறீஸ்தவனின் வாழ்விலே மிக முக்கியமான நாள் நரிகளுக்கு வளைகளும், வானத்துப்பறவைகளுக்கு கூடுகளும் கொடுத்த இறைமகன் தலைசாய்க்க இடமின்றிவானுக்கும், பூமிக்கும் இடையே அந்தரத்தில் தொங்கிய நாள். உலகின் பாவம் போக்கப்பட்ட புனிதமானநாள். ஒருதன் தன நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான தியாகம் இல்லை என்பதை கிறீஸ்த்து தன் வாழக்கையில் செய்துகாட்டி, தியாகத்திற்கு இலக்கணம் வரைந்து மெருகூட்டிய நாள். ஒருவனின் இறப்பிலே ஓர் சமுதாயம் உயிர்பெற்றது இத தான்முதல் தடவை. சரித்திரம் திரும்பி திரும்பி நடக்கு' என்பார்கள். ஒவ்வொரு கிறீஸ்தவனும், கிறீஸ்தவளும் தன் உயிரை, தன்சேவையை, தன்வாழ்வை, மற்றவர்களுக்குக் கொடுக்கும் போதுதான் இக்கூற்று உண்மையாகும்.

— அருட் செல்வன் ரூபன்

## குழந்தை...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கள் பற்றியும் நன்கு அறிந்திருந்தனர்.

''எனவே மாணவர்கள்தாம் பெறும் கல்வியோடு மட்டும் நின்றுவிடக் கூடாது. தமது சுற்ருடல், மற்றும் பொது அறிவு விடயங்களிலும் அதிக அக்கறை காட்ட வேண்டும் என்றுர்.

வேம்படி மகளிர் கல்லூரியினர் தமது கட்டிடநிதிக்காக நடத்திய மேற்படி கதம்ப நிகழ்ச்சியில், பரதநாட்டிய நிகழ்ச்சி, வாய்ப்பாட்டுக்கச்சேரி, வீணைக்கச்சேரி, நாடகம் உட்பட மேற்கத்திய இசை நிகழ்ச்சியையும் வழங்கினர்.

இக்கதம்ப நிகழ்ச்சியில் யாழ்ப்பாண பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் உட்பட பெற்ருேரும், கல்லூரி நலன்விரும்பிகளும் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கல்லூரி அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சிவஞானம் நன்றியுரை கூறினுர். (கி).

# மக்கள் கடை திறப்பு விழா

(கரவெட்டி)

உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திஞல் இமையாணன் கிழக்கில் நிறுவப்பட்டுள்ள மக்கள் கடை நாளை திறந்து வைக்கப் படவுள்ளது. இம் மக்கள் கடையை உடுப்பிட்டி எம்.பி. திரு.த. இராசலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்துவைக்கவுள்ளார்.

இமையாணன் கிராமோதய சபைத் தலைவர் திரு.க. அப்புக்குட்டி தலைமையில் நடைபெறும் இத்திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக பனம்பொருள் அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. க. நடராசா கலந்து கொள்கிருர்.

# வரி விளம்பரம்

## வகுப்புக்கள்

Hotel Management புதிய வகுப்புக்கள் 10—04—82ஆரம்பம். ஜீ. சி. இ. (சா), படித்த இருபாலாரும் கற்கலாம். நேரில் வரவும். அல்லது விண்ணப்பிக்கவும். J. E. C., 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (புகையிரத கடவைக்கு அருகில்) 2792

வெளிநாடுசெல்பவர்களுக்கு அரிய சந்தர்ப்பம். ஆங்கிலம் இலகுவாக பேச, எழுத, வாசிக்க நவீன முறையில் முப்பது நாட்களில் கற்பிக்கப்படும். முன் அனுபவம் தேவை இல்லை. தனியே விசேட கவனம் செலுத்தப்படும். ஆரம்பம் 10—04—82, J. E. C., 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (புகையிரத கடவைக்கு அருகில்) 2793

## தவறிவிட்டது

கடந்த செவ்வாய்க்கிழமை 6—4—1982ல், யாழப்பாணத்தில் இருந்து பளைவரை செல்லும் மாலை 5மணிபுகையிரதத்தில் ஒரு திறப்புக் கோர்வை தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். பாரத் ஸ்ரூடியோ, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம். 2799

## WANTED

Experienced Accounts Clerk English Typist and Office Aide. Apply in own hand—writing only before 13—4—1982 to the The Managing Director, H.P.T., 3, Model Market, (Upstairs) Jaffna. 2800

## விற்பனைக்கு

கனகராயன் குளம் குறிசுட்டகுளம் கண்டி ரோட்டில் 15 ஏக்கர் காணி விற்பனைக்கு. தொடர்பு கொள்ளவும். கயிலாஸ், கயிலாயபிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. 2795

மானிப்பாய் பட்டினசபை, இலங்கை வங்கி, பெற்றோல் செட், மகளிர் கல்லூரிக்கு அண்மையில் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு முன்பாக பத்துப்பரப்பு காணி விற்பனவுக்கு உண்டு. விபரங்களுக்கு: V.S. கந்தையா, தேநீர்கடை, மானிப்பாய். 279-


தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

**பழைய மாணவர் தினம்**

1982-04-11 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு வழமையான நிகழ்ச்சிகளுடன் ஆரம்பமாகும்.
பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

சு. ஏழூர்நாயகம்
திருமதி த. பாலசுப்பிரமணியம்
பழை மாணவர் சங்கம். இணைச் செயலர்.

2778



**விசேட அறிவித்தல்**

புது வருடத்தை முன்னிட்டு
7-4-1982 முதல் 14-4-1982 வரை
எமது அலுவலகம்
திறக்கப்படமாட்டாதென்பதை
வாடிக்கையாளர்களுக்கு
அறியத்தருகின்றோம்.

**த பினன்ஸ் கொம்பனி லிமிட்.,**
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



அரிய சந்தர்ப்பம் **Rare Opportunity**

**CANTABIA INSTITUTE**

அளிக்கும்

**ஆங்கில வகுப்புகள்**

(1) 40 Hour Basic English Course,
(2) 50 Hour Week — End English Course
(3) 6 Month Spoken English Course.

× வெளிநாடு செல்ல விரும்புபவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்,
× மாணவர்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்
× தொழில் புரிவோருக்கு நல்ல வாய்ப்பு
× அச்சிடப்பட்ட பாடக்குறிப்புகள் இலவசமாகக் கொடுக்கப்படும்.

And a Prestigious
(4) 5 Month Higher English Course

பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
ஆசிரியர்: கந்தையா நவரேந்திரன்
தொடங்கும் திகதி: 10—4—82

★ விபரங்கட்குத் தொடர்பு கொள்க:

தொலைபேசி: 8201 — 21, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.


## பாராட்டும் பொன்னாடையும்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை ஸ்ரீவாலாம்பிகை சமேத ஸ்ரீவைத்தீஸ்வர சுவாமி திருவிழாவில் ₂2 நாட்கள் தொடர்ந்து திருஞானசம்பந்தர் சரித்திரத்தை கதாகலாட்சேபமாக வழங்கிய திருப்பூங்குடி திரு. வி. வி. கே. ஆறுமுகத்துக்கு இன்று மேற்படி தேவஸ்தானத்தவர் பாராட்டு விழாவொன்றை நடத்தவிருக்கின்றனர்.

யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் திரு. வெ.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவிருககும் இப் பாராட்டு விழாவில், திரு. எஸ். தியாகராசா அடியார்கள் சார்பில் திரு. வி. வி. கே. ஆறுமுகத்துக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பார்.

வித்துவான் சி. ஆறுமுகம், திரு. க. கனகராசா ஆகியோர் இவ்விழாவில் பாராட்டுரை வழங்குவார்கள். (கி)

## இந்து ஆலயங்களைத் திறப்பதுபற்றி காந்திய பல்கலைக்கழகம் அ.பி.ச. தலைவருக்கு மனு

(பச்சிலைப்பள்ளி)

இந்தியாவிலுள்ள காந்தி உயர் நிலைப்பல்கலைக்கழகம், யாழ். மாவட்டத்தில்சமத்துவ வழிபாட்டுக்காகத் திறந்து விடப்படாமலிருக்கும்; இந்து ஆலயங்களைத் திறந்து விட நடவடிக்கை எடுக்கும்படி, கையெழுத்து மனுவின் மூலம் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. சு. நடராசாவிடம் கேட்டுள்ளது.

''யாழ். மாவட்டத்தில் இதுவரை 62 இந்து ஆலயங்கள் சமத்துவ வழிபாட்டுக்காகத் திறந்து விடப்படாமலிருப்பதை இலங்கை அறவழிப் போராட்டக்குழு தங்களின் கவனத்திற்கு கொண்டு வந்திருப்பதை நாம் அறிவோம். இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்களிடையே ஒற்றுமை மிக அவசியமானதாகும். சாதியின்பேரால் ஒரு பகுதி மக்களுக்கு வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டிருப்பது சமூகத்திடையே ஒற்றுமையீனத்தையும், பொருளாதார வீழ்ச்சியையும் கூட ஏற்படுத்தும். எனவே யாழ். மாவட்டத்தின் ஆட்சிநிர்வாகத்தின் தலைமைப் பீடத்தில் இருக்கும் தாங்கள் இவ்விடயத்தில் நல்லமுடிவினை ஏற்படுத்தவும் அக்கையெழுத்து மனுவில் கோரப்பட்டுள்ளது.

இக் கையெழுத்து மனு அறவழிப் போராட்டக்குழுவினர் மூலம் யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவரிடம் கையளிக்கப்படுகிறது.

நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள சமூகஸ்தாபனங்கள் மூலமும், இவ்விடயம் தொடர்பாக இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட கையெழுத்து மனுக்களும் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத்தலைவரிடம் வழங்குவதற்காக அறவழிப்போராட்டக் குழுவிடம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

## ஓய்வு பெறுகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் திரு. வ. வேலுப்பிள்ளை ஆண் பரிசாரர் தமது முப்பது வருட காலசேவையை முடித்து இம்மாதம் 11ந் திகதி தொடக்கம் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்கிறார்.

தமது கடமைக் காலங்களில் தொழிலாளர்களினதும்சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன கடன் நிவர்த்திச் சங்கம் ஆகியவற்றின் முன்னேற்றத்துக்கு இவர் அயராது உழைத்தவர்.

## கௌரவித்தனர்

(யாழ்ப்பாணம்)

இணுவில் சிவகாமி அம்மன் தேவஸ்தானத்தில் பத்து நாட்கள் தொடர்ந்து கந்தபுராண இன்னிசை விரிவுரை நிகழ்த்திய பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மாவை மேற்படி தேவஸ்தானத்தினர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

திரு. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இப் பாராட்டுவைபவத்தில் தேவஸ்தானத்தவர்கள் சார்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி திரு. சுகுணேந்திரன் பொன்னாடை போர்த்தினார். அத்துடன் 'முத்தமிழ்மாமணி' என்ற பட்டமும் பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மாவுக்கு வழங்கப்பட்டது.

ஆலயப் பிரதம குரு பிரம்மஸ்ரீ சபா. பரமேஸ்வரக் குருக்கள், சர்மாவுக்கு காளாஞ்சி வழங்கி ஆசீர்வதித்தார். (கி)

## "குட்டிமணி தாமாகவே ஒப்புதல் வாக்குமூலமளித்தார்" ஏ. எஸ். பி. நவரத்தினராஜா சாட்சியம்

(கொழும்பு)

''குட்டிமணி என்னிடம் யாரும் வற்புறுத்தாமல் தாமாகவே ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்''.

யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அதிபர் திரு. எஸ். நவரத்தினராஜா கொழும்பு மேல் நீதிமன்றத்தில் கான்ஸ்டபிள் சிவநேசன் கொலைவழக்கில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறுதெரிவித்தார்

இவ்வழக்கில் குட்டிமணி, ஜெகன், கறுப்பன் ஆகியோர் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

குட்டிமணியின் ஒப்புதல் வாக்குமூலத்தை ஒரு சாட்சியமாக சமர்ப்பிப்பதற்கு முன்னர் இந்த வாக்குமூலம் அளிக்கப்பட்டதா இல்லையா என்பதைஅரசதரப்பினரை நிரூபிக்கும்படிநீதிபதி கேட்டுக்கொண்டார்.

திரு. எஸ். நவரத்தினராசா தமது சாட்சியத்தில் தொடர்ந்து கூறியதாவது'' நான் சங்கானை பொலிஸ் நிலையத்தில் விஷேச கடமைக்காகச் சென்றிருந்தபோது குட்டிமணியை கடற்படையினர் துப்பாக்கிக் காயங்களுடன் கைதுசெய்து மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கின்றனர் என்று தகவல்கிடைத்தது. உதவிப்பொலிஸ் அதிபர் ஜனுப் நிஸாருடன் அன்று மாலை 4.45 மணிக்கு அங்கு சென்றேன்.

''குட்டிமணி வாக்குமூலம் கொடுக்கக்கூடிய நிலையில் உள்ளார் என்று டாக்டர் தெரிவித்தார் குட்டிமணியின் ஒப்புதல் வாக்குமூலத்தைப்பதிந்தேன். பருத்தித்துறை நீதவான் முன்னிலையில் இவ் வாக்குமூலத்தைப்பதிய ஏற்பாடு செய்த சிறிதுநேரத்தின் பின்னர் அங்கிருந்து ஜனுப் நிஸாம் சென்றுவிட்டார். குட்டிமணிக்குகாயம் ஏற்பட்ட சூழ்நிலைகளையும் அவரிடம் கேட்டுப்பதிந்தேன். இரவு 7·30மணியளவில் குட்டிமணி சோர்வடைந்ததால் வாக்குமூலம் பதிவதை நிறுத்திக்கொண்டேன்.

'குட்டிமணியை யாழ் ஆஸ்பத்திரிக்கு மாற்றினர். மறுநாள் காலை அங்கு சென்று திரும்பவும் அவரது வாக்குமூலத்தை காலை 9.30 மணியிலிருந்து 11.30 வரை பதிவு செய்தேன். முழு வாக்குமூலமும் பதிவுசெய்யப்பட்டதும் அதை குட்டிமணி வாசித்துப் பார்த்து கையெழுத்திட்டார். அதன்கீழ் நான்கையெழுத்திட்டேன்'' என்றார்.

விசாரணை தொடர்ந்துநடைபெறுகிறது. (கு)


மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF

**குமுலுஸ் எஸ்**




நீரில் கரையக் கூடிய 80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைக்ளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு ''மேற்கு ஜெர்மனி 'BASF'' தயாரிப்பாகும்.

குமுலுஸ் எஸ்
500 கிராம் ரூபா 12/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

மக்வுட்ஸ் ஸ்தாபனம்
297, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
தொலைபேசி: 32941-5

Metropolitan

# யாழ். நகரில் கூட்டுறவு கல்லூரி

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் கூட்டுறவுக் கல்லூரி ஒன்று நிறுவப்படவிருப்பதாக தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவரும், கோப்பாய் எம்.பி.மான திரு. எம். ஆலாலசுந்தரம் தெரிவித்துள்ளார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்துக்கருகாமையில் அமைக்கப்படவிருக்கும் இக்கல்லூரி 6 மாடிகளைக் கொண்டதாக இருக்குமென்றும், இக்கட்டிடத்திற்கான நிதியை அதிர்ஷ்டலாபச் சிட்டிழுப்பு, கலைநிகழ்ச்சிகள் மூலம் பெறுவற்குத் தீர்மானித்துள்ளதாகவும் திரு. ஆலாலசுந்தரம் தெரிவித்தார். (மா)


## VACANCY

Wanted a Clerk, who is cappable of handling hire purchase documentation independently Previous Exprience an advantage Apply with all details on or before the 15th April 1982. Giving two referees.

The post applied should be clearly indicated on the left hand corner of the envelope.

Apply:-

Sales Manager,

The Finance Co., Ltd

249, Power House Road,

Jaffna.


## பட்டப்பின்படிப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யம், கே. தங்கராஜா, திருமதி எஸ். வீரசாமி.

### சித்தி

எம். ஏ. அலோசியஸ் செல்வி ரி. அம்பலப்பிள்ளை, திருமதி ஈ. எம். நவரத்தினராஜா, செல்வி ஜே. சபாரத்தினம், கே. சந்திரபாலன், எஸ். சிற்றம்பலம், ரி. சிவபாதசிங்கம், ஏ. சிவதாசன், கே. தங்கவேல், எஸ். விஸ்வலிங்கம், எம். ஈ. ஜோன் பிள்ளை.

### நூன சித்தி

திருமதி ஏ. சிவசுந்தரம்.

## கடல் அரிப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களின் பிரதிநிதிகள் காவலூர் எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்தை நேற்றுமுன் தினம் அவரது இல்லத்தில் சந்தித்துக்கோரிக்கைவிடுத்தனர்.

இவர்களது முறைப்பாட்டைத் தொடர்ந்து காவலூர் எம். பி. தனது தொகுதி அபிவிருத்தி நிதியிலிருந்து பாரிய அணைக்கட்டை இங்கு அமைப்பதற்கு நிதி ஒதுக்குவதாக வாக்குறுதியளித்துள்ளார்.

## இப்படியும் நடக்கிறது

யாழ்ப்பாணம்—கொழும்பு தொலைபேசித் தாமதம் ('டிலே') என்ன?

காலையில் தொலைபேசி அழைப்பு 'புக்' செய்தால் ''ஒவர் எயிற் அவர்ஸ்'' (எட்டு மணி நேரத்துக்கும் அதிகமான தாமதம்) என்றுதான் இப்பொழுது பதில் கிடைக்கிறது!

முன்னர் எல்லாம் வழமையான தாமதம் எட்டு மணி நேரம்தான். ஆனல் எட்டு மணி நேரத்துக்கும் அதிகம் என்ருல்...

தொலைபேசி அவசியந்தானு?

'ஊடுருவி'

# "தலைமைப்பீடத்தை....

(1—ம் பக்கத்தொடர்ச்சி)

பி. திரு. வி. யோகேஸ்வரன் உறுதியளித்தசர்.

ஆனைக்கோட்டை உயரப்புலம் அறிவொளி சன சமூக நிலைய ஆண்டுவிழா திரு. கே. தம்பிராசா தலைமையில் நடைபெற்றபோது பிரதமவிருந்தினராக திரு. வெ.யோகேஸ்வரன் கலந்துகொண்டு உரைநிகழ்த்திஞர்.

தலைவர்கள் இலட்சியப் பாதையைவிட்டு விலகிச்செல்வதாகச் சிலர் குறைகூறி வேதனைப்படுவதையிட்டு கவலை தெரிவித்த திரு. யோகேஸ்வரன் தந்தைசெல்வாகாட்டிய வழியிலேயே நாங்கள் சென்று கொண்டிருக்கிறோம்'' என்ருர்.

''மாவட்ட அபிவிருத்திச் சபை அமைப்பதன் மூலம் எமது தமிழ்ஈழ மண்ணைப் பாதுகாப்பதுடன் மலையக மக்களை இப்பகுதிகளில் குடியமர்த்துவதன் மூலம் மத்திய அரசின் ஆதரவைப்பெறலாம்'' என்றும் அவர் சொன்ஞர்.

தமிழ்மக்கள்மத்தியில் நிலவிவரும் ஒற்றுமை குறித்து இந்தியத் தமிழ்நாட்டு மக்கள்கூட வியப்படைகிருர்கள் என்றும் திரு. யோகேஸ்வரன் குறிப்பிட்டார்.

யாழ். மாநகராட்சி மன்ற முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் பேசுகையில், குறிப்பிட்ட இயக்கத்தின் பெயரைச் சொல்லி, சிலவிஷமிகள் தங்கள் சொந்த நலனுக்காக கொள்ளை போன்ற சம்பவங்களில் ஈடுபட்டு வருகிருர்கள். இவர்களின் செயல்களையிட்டு மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும்' என்று எச்சரிக்கை விடுத்தார்.

மக்கள் தங்கள் உயிர்—உடைமைகளைப் பாதுகாக்க 'கராட்டி'யில் பயிற்சிபெற்றிருக்கவேண்டும் என்றும் அவர் ஆலோனை கூறிஞர்.

திரு. விசுவநாதன் மேலும் பேசுகையில் தமிழ்த்தலைவர்கள் தங்கள் கொள்கைகளை விட்டுக்கொடுக்காமலேயே அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்துகிருர்கள் என்றும் மக்கள் ஆணையை விட்டு இம்மியளவும் அவர்கள் விலகவில்லையென்றும் தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின்இளைஞர்பேரவைத்தலைவர் திரு. மாவை சேஞதிராசா உட்படபலர் உரைநிகழ்த்தினர். (மா)

## மரண அறிவித்தல்

### வீரசிங்கம் - கணேசசங்கரி

வீரசிங்கம் கணேசசங்கரி காலமானுர். தோப்பு அச்சுவேலியில் நடைபெற இருக்கும் ஈமைக்கிரிகைகளின் விபரம் பின்னர் அறிவிக்கப்படும். 2805

## மரண அறிவித்தல்

### நாகமுத்து வல்லிபுரம்

சில்லாலை நாகமுத்து வல்லிபுரம் வியாழக்கிழமை காலமானுர். இவர் இலங்கை புகையிரதப்பகுதியிலிருந்து ஒய்வுபெற்றவரும், நாகம்மா காலம் சென்ற முருகேசு, பொன்னம்மா ஆகியோரின் அன்புச்சகோதரனும், சின்னத்துரை, நாகலிங்கம் ஆகியோரின் மைத்துனரும்,கந்தையாவின் மாமனுரும், பரமேஸ்வரியின் பெரியதகப்பனுமாவார். அன்ஞரின் ஈமைக்கிரியைகள் இன்று(9 4-82) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சில்லாலையில் நடைபெற்று பண்டத்தரிப்பு விளாவெளி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை தயவுசெய்து உற்ருர், உறவினர் அன்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்க.

தகவல்: சபாபதி கந்தையா. (2809)


மிகவும் குறைந்த
விசேட
விமானக் கட்டணங்கள்
யாழ்ப்பாணத்தில்
மக்கினென்ஸ் வழங்குகிறது
★ சிங்கப்பூர் கூட்டாகச் செல்வோருக்கு
(GROUP TICKETS) மிகவும் கூடியகழிவுடன்
மற்றும் ஃ மத்திய கிழக்கு ஃ லண்டன்
உலகின் எப்பாகத்துக்கும்
விரும்பிய விமானத்தில்
விமான டிக்கட்
வங்கியில் அறவிடும்
அதே கட்டணத்தில்
பிரயாணக் காசோலைகள்
(TRVELLERS CHEQUES)
மக்கினென்ஸ் ட்றவல்
சேவிஸ் (சிலோன்) லிமிட்



# ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்

மக்கள் எதிர்பார்த்திருந்த புதிய உல்லாச பஸ் சேவை

தினசரி மாலை 8-30 மணி கொழும்பில் இருந்து----யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 8-00 மணி யாழ்ப்பாணத்தில் இருந்து-----கொழும்புக்கு
கண்ணியமான பாதுகாப்பான பஸ்சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கற் பெறுமிடங்கள்:-

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்
இல: 82, கன்னுதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 8310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 370—438—537

(3) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 7596

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச் லேன், சாவகச்சேரி.
தொலை பேசி இல; 273. சாவகச்சேரி

கொழும்பில் டிக்கற் பெறுமிடங்கள்

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190

(2) ரவீந்திரா ஸ்டோர்ஸ்
285, காலி வீதி, வெள்ளவத்தை.

(3) லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல.105,ஒல்கொட் மாவத்தை,புறக்கோட்டை.
தொலைபேசி இல; 22830

(4) ஸ்ரீமணிமலர் ஸ்டோர்ஸ்
இல: 157/2, ஸ்ரீகதிரேசன் வீதி, கொழும்பு—11
தொலைபேசி இல: 23277

(5) நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
127, காலி வீதி. பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல:88866


## மல்கம்பிரேஸர் வெற்றி

கான்பரா ஏப். 8

ஆஸ்திரேலிய பிரதம மந்திரி திரு. மல்கம் பிரேஸர் தமது அதிகாரச் செல்வாக்கை மேலும் வலுப்படுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

லிபரல் கட்சியின் தலைவர் பதவிக்கு நடைபெற்ற போட்டியில் பிரதமர் திரு. மல்கம் பிரேஸர் வெற்றிபெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

இவரை எதிர்த்து ஆஸ்திரேலியா வெளிநாட்டமைச்சர் திரு. பீக்கொக் இப்பதக்கு போட்டியிட்டார். (வெ)

## குருநகர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் நடைபெற்ற கடற்கொள்ளைச் சம்பவம்போல் இதுவும் நடந்திருக்கலாமென்று பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை மீனவர்கள் பற்றி எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் ஏப்ரல் மீ 9-ம் [illegible] [illegible] வெளியிடப்பட்டது. Registered as News Paper. [illegible] General P.O. Sri Lanka. Regd. Q. B. 100236/81. P.O. Box 49, Jaffna. [illegible] 77 07, 889, 8126.